Thalaivaasal

தலைவாசல்

Thalaivaasal

எங்கள் பாரம்பரியம்

வீடு 01 வாசல் 75 | thalaivaasaltv@gmail.com | புதன்கிழமை | டிசம்பர் 16, 2020

## மருதனார்மடம் கொத்தணி–68

| | |
|---|---|
| உடுவில் | 17 |
| ஏழாலை | 08 |
| தெல்லிப்பழை | 12 |
| இணுவில் | 04 |
| சங்கானை | 05 |
| சண்டிலிப்பாய் | 03 |
| மானிப்பாய் | 03 |
| பண்டத்தரிப்பு | 02 |
| அளவெட்டி | 02 |
| சுன்னாகம் | 02 |
| கீரிமலை | 02 |
| நல்லூர் | 02 |
| உரும்பிராய் | 01 |
| நவாலி | 01 |
| கொக்குவில் | 01 |
| நாவற்குழி | 01 |
| காங்கேசன்துறை | 01 |
| வடலியடைப்பு | 01 |

# மருதனார்மடம் கொத்தணி 68 இன்று 10 பேருக்கு தொற்று

மருதனார்மடம் பொதுச் சந்தை கோரோனா வைரஸ் கொத்தணியில் மேலும் 10 பேருக்கு கோவிட் - 19 நோய்த் தொற்று உள்ளமை இன்று (டிசெ. 16) புதன்கிழமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

சங்கானை வர்த்தகர்கள் 100 பேருக்கு இன்று பரிசோதனை செய்யப்பட்டு யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீடத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 08 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. அவர்களில் சங்கானை 04, உடுவில் 01, பண்டத்தரிப்பு 01, மானிப்பாய் 01,

03



## நாளை யாழ் வருகிறார் இராணுவத் தளபதி

இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா நாளை (வியாழக்கிழமை) யாழிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

இதன்போது அவர், வட்டுக்கோட்டையில் இராணுவத்தினரால் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட குளத்தினை திறந்து வைக்கவுள்ளார்.

யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியின் நெறிப்படுத்தலில்

03

## நாட்டை முடக்குவதா அடுத்தவாரம் முடிவு

நாட்டின் தற்போதைய நிலமைக்கு ஏற்ப மேலும் எடுக்க வேண்டிய முடிவுகள் 22 மற்றும் 23ஆம் திகதிகளில் அறிவிக்கப்படும் என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

03

# யாழ். மாநகரசபை பாதீடு தோல்வி

## பதவி இழக்கிறார் ஆர்னோல்ட் அருள்குமரனைக் களமிறக்க முஸ்தீபு





யாழ். மாநகர சபையின் 2021 ஆம் ஆண்டிக்கான வரவு – செலவுத் திட்டம் 03 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டுள்ள போதும் மீண்டும் இம்மானுவல் ஆனோல்ட் பதவியேற்கும் சாத்தியமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆயினும் கூட்டமைப்பின் சார்பில்

03

## நாவாந்துறையில் மரணச் சடங்கில் பங்கேற்றவருக்கு கொரோனா தொற்று

யாழ். நாவாந்துறை பகுதியில் இடம்பெற்ற மரண சடங்கு ஒன்றுக்கு கொரோனா தொற்றாளர் ஒருவர் சென்று வந்த நிலையில் குறித்த மரண சடங்கில் கலந்து கொண்ட 50ற்கும் மேற்பட்டவர்கள் இருப்பிடங்களில்

03

## வடக்கு மக்களுக்குப் பொறுப்பில்லை: கொரோனா பரவ அதுவே காரணம்



வடக்கு மாகாணத்தில் அதிகளவில் தொற்றுப்பரவலுக்கு மக்கள் ஒத்துழையாமையே காரணம் என வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி. எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

03

# பண்டிகைக்கால சலுகை வட்டிக் கடன்

## அனைத்துக் குடும்பங்களுக்கும் ரூபாய் 10,000-50,000 வரை உதவி அரசு அறிவிப்பு

ஒவ்வொரு குடும்பத்திற்கும் வரவிருக்கும் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு பண்டிகை காலங்களில் அவர்களின் பல்வேறு தேவைகளை நிறைவு செய்ய சலுகை வட்டி விகிதத்தில் கடன் உதவியை வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

இந்த அறிவிப்பை ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பிவைத்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்தக் கடன் திட்டம் 03 பிரிவுகளின் கீழ் வழங்கப்படுகிறது. மாதத்திற்கு

03




தரணி எங்கும் தமிழராய் இணைவோம்

# மேலும் சில பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டன

இலங்கையில் மேலும் சில பகுதிகள் நேற்று (செவ்வாய்க்கிழமை) இரவு முதல் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

அதன்படி களுத்துறை மாவட்டத்தின் தொட்டவத்தவும் மொனராகலை மாவட்டத்தின் படல்கும்புர, அலுபொத ஆகிய பகுதிகளை தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக அறிவித்து இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரால் சவேந்திர சில்வா உத்தரவு பிறப்பித்தார்.

குறித்த பகுதிகளில் கொவிட் 19 தொற்று உறுதியானவர்கள் அடையாளங்காணப்பட்டதை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நாட்டில் ஏற்கனவே தனிமைப்படுத்தலில் உள்ள பிரதேசங்களின் முழு விபரம்

கொழும்பு மாவட்டத்தில் வெள்ளவத்தை மயூரா பிரதேசம், முகத்துவாரம், கொட்டாஞ்சேனை, கிரேண்ட்பாஸ், ஆட்டுப்பட்டித்தெரு, டேம்வீதி, வாழைத்தோட்டம், தெமடகொடை, மாளிகாவத்தை, மருதானை ஆகிய பொலிஸ் அதிகாரப் பிரிவுகளும் கொம்பனித்தெருவின் வேகந்த கிராமசேவகர் பிரிவும் பொரளையில் உள்ள வனாத்தமுல்லை கிராமசேவகர் பிரிவும் வெல்லம்பிட்டியில் உள்ள சாலமுல்ல கிராமசேவகர் பிரிவும் லக்சந்த செவன வீட்டுத்திட்டம் என்பனவும் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டன.

அதேபோல கம்பஹா மாவட்டத்தில் பேலியகொடை பொலிஸ் அதிகார பிரிவுக்கு உட்பட்ட பேலியகொடவத்த, பேலியகொட கங்கபட, மீகஹாவத்த ஆகிய கிராம சேவகர் பிரிவுகள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தலில் உள்ளன.

கிரிபத்கொடை பொலிஸ் அதிகார பிரிவில் வெலேகொட வடக்கு பகுதியும் நீர்கொழும்பு பொலிஸ் அதிகார பிரிவிற்கு உட்பட்ட எம். சி. குடியிருப்பு தொகுதி மற்றும் வெயாங்கொடை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஹிரிப்பிட்டிய தெற்கு கிராம சேவகர் பிரிவுகளும் தொடர்ந்தும் தனிமைப்படுத்தலில் உள்ளன.

ஹூணுப்பிட்டி வடக்கு கிராம சேவகர் பிரிவுக்கு உபட்ட வெலிகந்த பகுதியும் நிட்டம்புவ பொலிஸ் அதிகார பிரிவுக்கு உட்பட்ட திஹாரி வடக்கு மற்றும் திஹாரி கிழக்கு கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட வாரன பன்சல வீதி, கத்தோட வீதி மற்றும் இன்ரா மாவத்தை பகுதிகளும் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டன.

வத்தளை பொலிஸ் அதிகார பிரிவுக்கு உட்பட்ட கெரவலபிட்டிய கிராம சேவகர் பிரிவிலுள்ள நைதுவ பகுதியும் வெலிகடமுல்ல கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட துவே வத்த பகுதியும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் பேலியகொடை பொலிஸ் அதிகார பிரிவுக்கு உட்பட்ட பட்டியமுல்ல கிராம சேவகர் பிரிவிலுள்ள ரோஹனவீர மாவத்தை பகுதியும் தற்போதும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை களுத்துறை மாவட்டத்தில் புலத்சிங்க பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வேகங்கல்ல கிழக்கு மற்றும் வேகங்கல்ல மேற்கு கிராம சேவகர் பிரிவுகள் சிறிய ஹீனிடியங்கல கிராம சேவகர் பிரிவும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அதேநேரம், கொழும்பு, கம்பஹா, களுத்துறை அல்லாத நாட்டின் ஏனைய மாவட்டங்களில்தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ள இடங்கள் மறு அறிவித்தல் வரையில் அவ்வாறே பேணப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தலைவாசல் Thalaivaasal எங்கள் பாரம்பரியம்

## தினம் ஒரு ஆரோக்கிய தகவல்

### நீரிழிவு நோயுடன் சுகவாழ்வு

நீரிழிவு நோய் வராமல் தடுக்கும் நடைமுறைகள் எவ்வளவு முக்கியமோ அதே போல் நீரிழிவு ஏற்படின் பதற்றம் கொள்ளாமல் ஆரோக்கிய வாழ்க்கையை வாழ்தல் முக்கியமானது.

சீனி சேர்க்கப்பட்ட பொருட்கள், மாப்பொருள் அதிகமான உணவுகளை தவிர்க்க வேண்டும்.

தவறாது சரியான நேரத்தில் மாத்திரைகளை எடுக்க வேண்டும். சிகிச்சை நிலையங்களுக்குத் தவறாது சென்று மருத்துவ பரிசோதனை கட்டாயமாக செய்ய வேண்டும்.

**வைத்தியகலாநிதி கோ.றஜீவ்**

# கொரோனாவால் மேலும் மூவர் உயிரிழப்பு

இலங்கையில் மேலும் மூவர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

அதன்படி கொழும்பு 14 பிரதேசத்தை சேர்ந்த 60 வயதுடைய பெண் ஒருவரும் கொழும்பு 15 பகுதியைச் சேர்ந்த 85 வயதுடைய ஆண் ஒருவரும் 84 வயதுடைய ஆண் ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதனையடுத்து இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 157 ஆக அதிகரித்துள்ளது.

இதேநேரம், நாட்டில் நேற்று மட்டும் 622 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இலங்கையில் கொரோனா தொற்று கண்டறியப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 34 ஆயிரத்து நூறாக அதிகரித்துள்ளது.

அவர்களில் 24 ஆயிரத்து 867பேர் தொற்றிலிருந்து மீண்டுள்ள நிலையில், இன்னும் ஒன்பதாயிரத்து 79 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## நேற்று 622 பேருக்கு கொரோனா

நாட்டில் நேற்று மட்டும் 622 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இலங்கையில் கொரோனா தொற்று கண்டறியப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 34 ஆயிரத்தைக் கடந்த 34 ஆயிரத்து நூறாக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்து இன்று 558 பேர் வீடுகளுக்குத் திரும்பியுள்ள நிலையில் இதுவரை 24 ஆயிரத்து 867பேர் தொற்றிலிருந்து மீண்டுள்ளனர்.

இந்நிலையில், இன்னும் ஒன்பதாயிரத்து 79 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

### வவுனியாவில் பாடசாலை மாணவிக்கு கொரோனா:

# 35 மாணவர்கள் மற்றும் 12 ஆசிரியர்கள் தனிமைப்படுத்தலில்

வவுனியா கற்குழியைச் சேர்ந்த மாணவி ஒருவருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ள நிலையில், நகர பாடசாலைகள் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளன.

குறித்த மாணவி வவுனியா இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்று வருகின்றார்.

இவர் வேறு நோய் காரணமாக வவுனியா வைத்தியசாலைக்குச் சென்ற நிலையில் அவருக்கு எழுமாறாக பி.சி.ஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. இதன்போதே அவருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதிசெய்யப்பட்டிருந்தது.

இதனிடையே, குறித்த மாணவி கடந்த மூன்று மாதங்களாக பாடசாலைக்கு சமூகமளிக்கவில்லை என பாடசாலை நிர்வாகம் தெரிவிக்கின்றது.

எனினும் நேற்றயதினம் பாடசாலைக்கு அவர் சென்று கல்வி செயற்பாடுகளில் பங்கெடுத்துள்ளார் என்றும் இதன்போது இரண்டு வகுப்புகளை சேர்ந்த 35 மாணவர்களை ஒன்றாக இணைத்து பாடம் கற்பிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

அந்தவகையில் குறித்த மாணவிக்கு 12 ஆசிரியர்கள் கற்பித்துள்ளனர். எனவே ஆசிரியர்கள், மற்றும் மாணவர்கள் அனைவரும் சுய தனிமைப்படுத்தலில் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொரோனா அச்சம் காரணமாக வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்கு உள்பட்ட புளியங்குளம் இந்துக் கல்லூரி மற்றும் வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஐந்து பாடசாலைகள் ஏற்கனவே மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# செட்டிகுளம் பிரதேச சபையின் புதிய தவிசாளர் தெரிவுசெய்யப்பட்டார்



வவுனியா வெண்கல செட்டிகுளம் பிரதேச சபையின் புதிய தவிசாளராக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சுப்பையா ஜெகதீஸ்வரன் (சிவம்) தெரிவு செய்யப்பட்டார்.

செட்டிகுளம் பிரதேச சபையின் வரவுசெலவுதிட்டம் இரண்டு தடவைகள் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு தோல்வியை தழுவியிருந்தது.

அந்தவகையில் புதிய தவிசாளருக்கான வாக்கெடுப்பு வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிறெஞ்சன் தலைமையில் இன்று (பதன்கிழமை) இடம்பெற்றது.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் சு.ஜெகதீஸ்வரனும் சுதந்திரக் கட்சி சார்பில் ஏற்கனவே தவிசாளராக பதவி வகித்த ஆ.அந்தோணியின் பெயரும் முன்மொழியப்பட்டன.

தெரிவிற்கான வாக்கெடுப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிவம் 10 வாக்குகளைப் பெற்று தவிசாளராக தெரிவுசெய்யப்பட்டார்.

அவருக்கு கூட்டமைப்பின் 05 உறுப்பினர்களும் ஈ.பி.ஆர்.எல்.எப். 03, தமிழ் தேசிய மக்கள் முன்னனி 01, முஸ்லிம் காங்கிரஸின் 01 உறுப்பினரும் வாக்களித்திருந்தனர்.

சுதந்திரக் கட்சியின் வேட்பாளரான அந்தோணி 6 வாக்குகளை மாத்திரம் பெற்று தோல்வியடைந்தார். அவருக்கு அந்த கட்சியின்4 உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் 2 உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் ஒருவர் நடுநிலைமை வகித்திருந்தார்.

இந்த நிலையில் மூன்று வருடங்களின் பின்னர் செட்டிகுளம் பிரதேச சபையின் புதிய தவிசாளராக சு.ஜெகதீஸ்வரன் தெரிவுசெய்யப்பட்டார்.

# புதிய கொரோனா சிகிச்சை நிலையங்களை ஸ்தாபிக்க அரசு தீர்மானம்

அதிக நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கக்கூடிய வசதிகளைக் கொண்ட வைத்தியசாலைகளை கையேற்று, அவற்றை கொரோனாவிற்கு சிகிச்சை வழங்கும் நிலையங்களாக அபிவிருத்தி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சியின் தலைமையில் இன்று (புதன்கிழமை) இடம்பெற்ற கொரோனா தொற்று ஒழிப்பிற்கான செயலணியின் மீளாய்வுக்கூட்டத்தின் போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

அதன்படி புதிய சிகிச்சை நிலையங்களை ஸ்தாபிப்பதற்கான நிதியினை சுகாதார அமைச்சினூடாக ஒதுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு மேலதிக செலவுகளை உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி நிதியம் ஆகியவற்றினூடாக பெற்றுக்கொள்ளவும் இன்றைய மீளாய்வுக் கூட்டத்தின் போது கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது.

# அநுராதபுரத்தில் கோர விபத்து: தாயும் குழந்தையும் உயிரிழப்பு! 8 பேர் கைது!!



அநுராதபுரம் - பாதெனிய வீதியில் பஹலபலல்ல பகுதியில் இடம்பெற்ற விபத்தில் தாயும் குழந்தையும் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கெப் ரக வாகனமொன்று குறித்த இருவரையும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதுடன், இதன்போது குறித்த கெப் ரக வாகனத்தில் 11 பேர் பயணித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து, சம்பவம் தொடர்பில் 8 பேர் இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளதுடன், வாகன ஓட்டுனர் உட்பட மூவர் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மின்சார வேலியில் சிக்கி சாரதி மரணம்

மொரவெவ - பன்குளம பிரதேசத்தில் வசிப்பிடங்களுக்குள் பிரவேசிக்கும் மிருகங்களை தடுப்பதற்காக பயன்படுத்தப்படும் சட்ட விரோதமான மின்சார வேலியில் சிக்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இன்று காலை குறித்த நபர் மொரவெவ பிரதேசத்தில் விவசாய நடவடிக்கைகளுக்காகச் வயலுக்குச் சென்ற வேளையிலேயே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

உயிரிழந்த நபர் 25 வயதுடைய குருந்துவெல பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## நாவாந்துறையில்...

தனிமைப்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

மருதனார்மடம் சந்தை கொத்தணியுடன் தொடர்புடைய ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதியான நிலையில் குறித்த நபர் நாவாந்துறை - கண்ணாபுரம் பகுதியில் மரண சடங்கு ஒன்றில் கலந்து கொண்டிருந்தமை சுகாதார பிரிவினால் கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து மரண சடங்கில் கலந்து கொண்டிருந்த சுமார் 50ற்கும் மேற்பட்டவர்களை உடனடியாக தனிமைப்படுத்த சுகாதார பிரிவினர் நடவடிக்கை எடுத்திருக்கின்றனர்.

## மருதனார்மடம்...

வடலியடைப்பு 01 என அடையாளங்காணப்பட்டுள்ளனர்.

அதேபோல் யாழ் போதனா வைத்தியசாலையின் ஆய்வுகூடத்தில் 402 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் மருதனார்மடம் பொதுச் சந்தை வியாபாரிகளுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்த ஏழாலையைச் சேர்ந்த 2 பேருக்கே இவ்வாறு தொற்று ஏற்பட்டுள்ளது.

இதன்மூலம் மருதனார்மடம் கோரோனா வைரஸ் கொத்தணியின் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 68ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை கோப்பாய் சிகிச்சை நிலையத்தில் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளை பராமரிக்க வந்திருந்த உறவினர்கள் 04 பேருக்கும் மட்டக்களப்பிலிருந்து யாழில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த ஒருவருக்கும் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## நாளை யாழ்...

இந்தக் குளம் புனர் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் விவசாய பயன்பாட்டுக்கு பாவிக்க முடியாத நிலையில் காணப்பட்ட குறித்த குளத்தினை இராணுவத்தினர் கடந்த இரண்டு மாதங்களாக புனர் நிர்மாணம் செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ். மாநகர சபை...

மற்றொரு வேட்பாளரை முன்னிறுத்த தற்போது ஏனைய தரப்புக்கள் சிபார்சினை முன்வைத்துள்ளன.

வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 21 வாக்குகளும், எதிராக 24 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்கு உட்பட்ட யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2021 ஆம் ஆண்டிக்கான வரவு - செலவுத் திட்டம், மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனோல்டினால் கடந்த 2 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அந்தச் சமர்ப்பணத்தின் போது, அதற்கு ஆதரவாக 19 வாக்குகளும், எதிராக 24 வாக்குகளும் அளிக்கப்பட்டு முதலாவது வாசிப்பு தோற்கடிக்கப்பட்டிருந்தது.

மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனோல்ட் தலைமையில் இன்று காலை இடம்பெற்ற விசேட பொதுக் கூட்டத்தில் வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு இடம்பெற்றது.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 16 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் 03 உறுப்பினர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர் ஒருவரும், சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் ஒருவரும் வரவு - செலவுத் திட்டத்திக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 13 உறுப்பினர்களும், ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சியின் 10 உறுப்பினர்களும், சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் ஒருவரும் வரவு - செலவுத் திட்டத்திக்கு எதிராக வாக்களித்தனர்.

இந்நிலையில் புதிய முதல்வர் பெயரை 14 நாட்களுள் சமர்ப்பிக்க வேண்டிய தேவை உள்ள போதும் மாற்றீடான தரப்பு இன்மையே காணப்படுகின்றது.

ஈபிடிபி தமது தரப்பில் சட்டத்தரணி ரெமீடியஸை களமிறக்க திட்டமிட்டுள்ளது.

ஆயினும் மறுபுறம் ரெமீடியஸிற்கு மாற்றீடாக களமிறக்க பொருத்தமான வேட்பாளர் இல்லாத சூழலே காணப்படுகின்றது.

தமிழ் தேசிய முன்னணியின் உள்ளக முரண்பாடுகளால் மணிவண்ணனின் முதல்வர் கனவு பொய்த்துள்ளது.

இந்நிலையில் மாற்றீடு இன்றி இம்மானுவல் ஆனோல்டினை களமிறக்க சில தரப்புக்கள் முயற்சித்துவருகின்றன.

எனினும் சுமந்திரன் தரப்பு தற்போதைய யாழ். பல்கலைக்கழக துணைவேந்தரின் ஊடக செயலாளரும் கூட்டமைப்பின் உறுப்பினருமான அருள்குமரனை களமிறக்க திட்டமிட்டுள்ளதாக தெரியவருகின்றது.

## பண்டிகைக்கால...

50 ஆயிரம் ரூபாய்க்கு அல்லது 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் உழைப்பவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் கடன் வழங்கப்படும்.

மாத சம்பளம் அல்லது வருமானம் 25 ஆயிரம் ரூபாய்க்கு முதல் 50 ஆயிரம் ரூபாய் வரை உள்ளவர்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் கடன் வழங்கப்படும். மாத சம்பளம் அல்லது வருமானம் 25 ஆயிரம் ரூபாய்க்கும் குறைவாக ,ருந்தால், கடன் தொகை 10 ஆயிரம் ரூபாய் ஆகும்.

இந்தக் கடனை இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, பிராந்திய அபிவிருத்தி வங்கி மற்றும் சமுர்த்தி வங்கி ஆகிய வழங்குகின்றன.

நிதி உதவி பெற விரும்பும் பொது மற்றும் தனியார் துறைகளில் உள்ள ஊழியர்கள் தங்கள் மேலதிகாரிகளுக்கு தெரிவிக்க வேண்டும். நிறுவனத்தின் தலைவர் தனது ஊழியர்களின் சான்றளிக்கப்பட்ட சம்பளப் பட்டியலை வேலை செய்யும் இடத்திற்கு அருகிலுள்ள அரச வங்கியில் சமர்ப்பிக்கும் போது, அந்த வங்கிக் கிளை ஊழியர்களின் கணக்கில் உடனடியாக அந்தக் கடன் தொகையை வரவு வைக்கும்.

கடனை 10 மாதங்களுக்குள் திருப்பிச் செலுத்த வேண்டும். மாத வட்டி 0.625 சதவீதம். கடன் தொகை 2021 ஜனவரி முதல் ஒக்டோபர் 31 வரையிலான கால கட்டத்தில் ஊழியரின் சம்பளத்திலிருந்து கழிக்கப்படும்.

அரசு ஓய்வு பெற்றவர்கள் மற்றும் சமுர்த்தி பெறுநர்களுக்கு கடன் வழங்குவது ஓய்வூதியத் திணைக்களம் மற்றும் சமுர்த்தி வங்கியில் உள்ளது.

முச்சக்கர வண்டிகளின் உரிமையாளர்கள், பாடசாலை வான்கள், பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்து சாரதிகள், நடத்துனர்கள் தங்கள் வங்கிக் கணக்கு பராமரிக்கப்படும் அரச வங்கியில் தங்கள் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிப்பதன் மூலம் சலுகைக் கடனுக்காக விண்ணப்பிக்கலாம்.

இந்த பிரிவிற்குள் வராத ஆனால் அரச வங்கிகளில் கணக்குகளை வைத்திருக்கும் நாளாந்த வேலைகளில் ஈடுபடுபவர்களுக்கும் தங்கள் வங்கிகளின் ஊடாக நிதி வசதிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

கோவிட் 19 சவாலுக்கு மத்தியில் பின்னடைந்துள்ள பொருளாதாரம் மற்றும் மக்களின் இயல்பு வாழ்க்கையை முற்றிலுமாக மீட்டு, 2020 ல் இழந்த முன்னேற்றத்துடன், 2021 ஆம் ஆண்டில் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வது அரசின் நோக்கமாகும்.

தொற்றுநோய் காலப்பகுதியில் சுமார் ,ரண்டு மாத பயணக் கட்டுப்பாட்டு காலத்தில் ஏற்றுமதி, சுற்றுலா, நிர்மாணத்துறை மற்றும் ஏனைய உற்பத்தி மற்றும் சேவைகளை படிப்படியாக ,யல்பு நிலைக்கு கொண்டுவர உழைக்கும் மக்களும் வர்த்தக சமூகமும் பெரும் தியாகங்களைச் செய்தனர்.

இதற்கு சுகாதாரம், பாதுகாப்பு, பொலிஸ் மற்றும் அரச சேவைகளிடமிருந்து பெரும் ஆதரவு கிடைத்தது. எனவே, 2020 ஆம் ஆண்டில் விவசாய உற்பத்தித் துறையில் ஒரு மறுமலர்ச்சிக்குள் பிரவேசிக்க முடிந்தது. நகர்ப்புற மக்களின் இயல்பு வாழ்க்கையை பேணுவதற்கான உணவு விநியோகத்தை இது உறுதி செய்தது. அவ்வாறு பங்களித்த மக்களுக்கு வழங்கப்படும் ஊக்குவிப்பாக பண்டிகை காலங்களில் இதுபோன்ற நிதி வசதிகள் திட்டமிடப்பட்டுள்ளன- என்றுள்ளது.

## வடக்கு மக்களுக்கு...

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இன்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்

வெளியிடங்களில் இருந்து வருபவர்கள் தொடர்பான தகவல்களை, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மக்கள் வழங்கத் தவறியமையே கொரோனா தொற்றுப் பரவலுக்குக் காரணம்.

மருதனார்மட தொற்று நிலைமை தொடர்பில் 500 குடும்பங்கள் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்களை கண்டறியும் நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் ஆரம்பித்துள்ளனர்.

தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்களை இனங்காணும்வரை, தொற்று சமூகப் பரவலாக உருமாறுவதைத் தடுக்கும் நோக்கில், தொற்றாளர்கள் அதிகமாகவுள்ள இடங்களில் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

ஏற்கனவே பொதுமக்களுக்கு ஒரு அறிவித்தலை வழங்கியிருந்தேன். வெளியிடங்களிலிருந்து யாராவது உங்கள் பிரதேசங்களுக்கு வந்தால் அது தொடர்பில் சுகாதாரப் பிரிவுக்கு அறிவிக்குமாறு. ஆனால் இந்த அறிவிப்பு தொடர்பில் பொதுமக்கள் எமக்கு ஒத்துழையாமையே இன்று தொற்றுப் பரவுவதற்கு ஏதுவாகிவிட்டது.

வடக்கில் இன்னமும் கொரோனா கொத்தணிகள் உருவாகவில்லை. ஆகவே மக்கள் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி, தொற்றிலிருந்து தம்மையும், சமூகத்தையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்'எனக் குறிப்பிட்டார்.

## நாட்டை முடக்குவதா...

தற்போதைய சூழ்நிலையில் நாடு முழுவதும் தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவை நடைமுறைப்படுத்தவோ அல்லது தனிமைப்படுத்தவோ எந்த காரணமும் இல்லை என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இருப்பினும், 22 அல்லது 23ஆம் திகதிக்குள் நாட்டின் நிலமையைப் பொறுத்து ஜனாதிபதியும் அரசும் தேவையான முடிவுகளை எடுப்பார்கள் என்று இராணுவத் தளபதி குறிப்பிட்டார்.

# தொற்று இல்லாத குடும்பஸ்தரை கொரோனா நோயாளியுடன் கூட்டிச் சென்ற அதிகாரிகள்!

## யாழில் சம்பவம்

கொரோனா வைரஸ் தொற்று இல்லாத ஒருவரை கொரோனா சிகிச்சை நிலையத்தில் சேர்த்த உடுவில் சுகாதார வைத்திய அதிகாரிகளின் செயலால் குடும்பஸ்தர் ஒருவர் மனநலப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளார்.

மருதனார்மடம் பொதுச்சந்தையில் வெற்றிலைக் கடை நடத்தும் குடும்பஸ்தர் ஒருவர், சுன்னாகம் பகுதியில் வசித்து வருகின்றார். அவரிடமும் மாதிரி பெறப்பட்டு பி.சி. ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டது.

இருப்பினும் அதன் பெறுபேறு நேற்றுவரை அவருக்குத் தெரியப் படுத்தாத நிலையில் நேற்று அவரது வீட்டுக்குச் சென்ற சுகாதார அதிகாரிகள் குழுவினர்,

"உங்களுக்குக் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு உடன் வாருங்கள்" என்று கூறி அழைத்தனர். இதனால் குறித்த நபரும் வாகனத்தில் ஏறிப் பயணித் துள்ளார்.

அவருடன் கூட சுன்னாகம் - கண்ணகி முகாமில் வசிக்கும் ஒரு கொரோனா நோயாளியையும் ஏற்றிக்கொண்டு வேறு ஒருவரது முகவரியைத் தேடித் திரிந்த சுகாதார அதிகாரிகள்,

அதன்பின்னர் கோப்பாய் கல்வியல் கல்லூரியில் இயங்கும் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு வந்தடைந்தனர். அதன்போது கோப்பாய் கல்வியல் கல்லூரி வாசலில் பதிவேட்டைப் பரிசீலித்தவர்,

கொரோனா நோயாளர் பெயர்ப் பட்டியலில் குறித்த குடும்பஸ்தரின் பெயர் இல்லை எனக் கூறி அவருடன் வந்த இரண்டாவது நோயாளியை மட்டும் சிகிச்சை நிலையத்துக்கு அனுமதித்தார்.

இதையடுத்து குறித்த குடும்பஸ்தர் மீண்டும் அதே வாகனத்தில் வீட்டுக்குக் கொண்டு வரப்பட்டு இறக்கப்பட்டார்.

தான் கொரோனா நோயாளியுடன் வாகனத்தில் பயணித்தமையால் தனக்கு உண்மையில் கொரோனாத் தொற்று ஏற்படுமோ என அவர் அஞ்சி மனநலப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளார். இது தொடர்பில் அவரின் குடும்பத்தினர் கவலையும் விசனமும் தெரிவித் துள்ளனர்.

# கீரிமலை அந்தியேட்டி மண்டபம் தனிமைப்படுத்தப்பட்டது



கீரிமலை அந்தியேட்டி மண்டபத்தில் சமய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த குருக்கள் மற்றும் பிரதேச சபை ஊழியர்கள் உட்பட சிலர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கொரோனா தொற்றுக்கு உள்ளான ஒருவர் கீரிமலை அந்தியேட்டி மண்டபத்திற்கு சென்றிருந்த நிலையில், இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த நபர் கடந்த 12ஆம் திகதி அந்தியேட்டி கடமை ஒன்றை நிறை வேற்றுவதற்காக கீரிமலைக்கு சென்றி ருந்தமை தெரிய வந்துள்ளதையடுத்தே, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

மேலும் குறித்த நபர் கீரிமலைக்கு சென்றிருந்த நேரத்தில் கீரிமலைப் பகுதியில் வாகன பாதுகாப்பு வீதியில் கடமையில் இருந்த ஒருவர் மற்றும் உட்செல்பவர்களை அனுமதிக்கும் பொருட்டு விபரங்களை சேகரிக்கும் இருவர், பிரதேச சபை ஊழியர்கள் மூவர் உட்பட அந்தியேட்டி நடவடிக்கை மேற்கொள்ளும் மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த குருக்கள் என சிலர் தனிமைப் படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெலிசறை வைத்தியசாலையில் கொரோனா நோயாளி தப்பியோட்டம்



கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகிய நிலையில் வெலிசறை சுவாச நோய்க்கான தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்த ஒருவர் அங்கிருந்து தப்பியோடியுள்ளார்.

இந்த நிலையில், குறித்த நபரைத் தேடும் பணிகளில் ஈடுபட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மருதானை பகுதியை சேர்ந்த 43 வயதுடைய குறித்த நபர் சுவாச பிரச்சினை காரணமாக வைத்தியசாலையில் அனுமதிப்பட்டுள்ளார்.

அதன் பின்னர் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் அவர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி இருந்தமை இனங்காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 2022ஆம் ஆண்டு ரி-20 உலகக்கிண்ணம்: தகுதிச்சுற்றுகளில் 86 அணிகள் மோதல்!

2022ஆம் ஆண்டு அவுஸ்ரேலியாவில் நடைபெறவுள்ள ரி-20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில், பங்கேற்க 86 அணிகள் தகுதிச்சுற்றுகளில் மோதவுள்ளன.

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக் கான 15 இடங்களுக்கு தகுதிபெற அந்த அணிகள் யாவும் 13 மாதங்களில் 225 போட்டிகளில் விளையாடுகின்றன. 4 படிநிலைகளாக அணிகளை தேர்வு செய்யும் இந்த நடைமுறை அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தொடங்குகிறது.

அவுஸ்ரேலியாவில் நடைபெறவுள்ள இந்த உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் பங்கேற்க தகுதிபெறுவதற்காக முதல் முறையாக ஹங்கேரி, ருமேனியா, செர்பியா அணிகள் போட்டியிடுகின்றன.

அதேபோல், ஐசிசி போட்டிகளில் முதல் முறையாக அவுஸ்ரேலியாவுக்கு எதிராக பின்லாந்து மோதவுள்ளது. அதேபோல் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கான தகுதிச்சுற்று போட்டி ஒன்றை ஜப்பான் முதல் முறையாக நடத்தவுள்ளது.

தகுதிச்சுற்று போட்டிகள் ஆபிரிக்கா, அமெரிக்கா, கிழக்கு ஆசியா மற்றும் பசிபிக், ஐரோப்பா ஆகிய பிராந்தியங்களில் நடைபெறும்.

இதில் ஆபிரிக்கா, கிழக்கு ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியங்களில் இருந்து தலா ஒரு அணி தகுதிபெறும். அதேவேளையில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பா பிராந் தியங்களில் இருந்து தலா 2 அணிகள் தகுதி பெறும். ஆசியாவிலிருந்து தகுதிச்சுற்று 'ஏ' மற்றும் 'பி' பிரிவுகளில் இருந்து தலா 1 அணி தேர்வாகும். இவை மொத்தமாக 8 அணிகள் கணக்காகும்.

இது தவிர, இந்தியாவில் நடைபெறும் 2021 ரி-20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் கடைசி 4 இடங்களை பிடிக்கும் அணிகள், ஐசிசி டி20 தரவரிசை அடிப் படையில் நேரடியாகத் தகுதிபெற்ற நேபா ளம், சிங்கப்பூர், ஐக்கிய அரபு அமீரகம், சிம்பாப்வே ஆகிய 4 அணிகள் சேர்ந்து மேலும் 8 இடங்களுக்கு தகுதிபெறும்.

இந்த இரு 8 அணிகள் பிரிவிலிருந்து தேர்வாகும் தலா 4 அணிகள், தொடரை நடத்தும் அவுஸ்ரேலியா, 2021ஆம் ஆண்டு உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் அடிப்படையில் நேரடியாகத் தகுதிபெறும் 11 அணிகள் என 16 அணிகள் 2022ஆம் ஆண்டு உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் விளையாடும்.

# சிறுபான்மையினரின் மத உரிமைக்கு மதிப்பளியுங்கள்!

## மன்னாரில் விழிர்ப்புணர்வு போராட்டம்






சிறுபான்மை இன மக்களின் மத உரிமைக்கு மதிப்பளிக்குமாறுக் கோரி மன்னாரில் அமைதியான முறையில் விழிர்ப்புணர்வு போராட்டம் இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான நிறுவனத்தின் (மெசிடோ) ஏற்பாட்டில், வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் சார்பாக குறித்த விழிர்ப்புணர்வு போராட்டம் இடம் பெற்றது.

மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக இன்று (புதன்கிழமை) காலை ஒன்று கூடிய மக்கள் அமைதியான முறையில் குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

குறித்த போராட்டத்திற்கு மன்னாரின் இளம் சட்டத்தரணிகள் ஆதரவு தெரிவித்து கலந்துகொண்டதோடு, நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், மன்னார் நகர சபையின் உப தலைவர் மற்றும் உறுப்பினர்களும் கலந்துகொண் டிருந்தனர்.

இதன்போது சிறுபான்மை இன மக்களின் மத உரிமைக்கு மதிப்பளிக்க கோரியும் உயிருடன் இருக்கின்றபோது உடலுக்கு கொடுக்கின்ற மதிப்பினை அவர்கள் மரணிக்கின்றபோது அவர்க ளுக்கு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையினை விழிர்ப்புணர்வு போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் முன்வைத்தனர்.

மேலும் கொரோனா தொற்றால் இறந்த உடல்கள் தகனம் செய்யப்படுகின்றமை உறவினர்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்துகின்றது. எனவே உலக சுகாதார ஸ்தாபனத்தின் செயற்திட்டங்களை உள்வாங்கி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்து குறித்த விழிர்ப்புணர்வு போராட்டத்தை முன் னெடுத்துள்ளனர்.